1970 மார்ச் 25]

திரு. நா. வீராசாமி : துணைத் தலைவரவர்களே, இந்திய மருந்துகள்குறித்த மத்திய ஆராய்ச்சிக் கழகத்திலே யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள். நம்முடைய நாட்டு மூலிகைகளைப் பற்றி அறிந்தவர்கள் அதில் இடம் பெற்றிருக்கிறார்களா அல்லது வெளிநாட்டுக்காரர்கள் இடம் பெற்றிருக்கிறார்களா? பொதுவாக நம்முடைய இலக்கியங்களிலே பார்க்கும் நேரத்தில், கீரியும் பாம்பும் சண்டை போட்டால், கீரியைப்பாம்பு கடித்துவிட்டால் கூட விஷம் ஏறாத அளவுக்கு கீரி அந்த மூலிகைகளில் புரளுவ தாகச் சொல்லப்படுகிறதே, இதையெல்லாம் அந்தக் கழகம் ஆராய்ச்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மத்திய ஆராய்ச்சிக் கழகத்தில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற விவரக் குறிப்புகள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம். ஆனால் எந்தெந்த மருந்துகளால் என்னென்ன விளைவுகள் உண்டாகின்றன என்று அவர்கள் ஆராய்ச்சி செய்து வெளியிடுகிறார்கள். நாம் எது எது பலனளிக்கும் என்று தெரிவிக்கும் நிலையில், பல்வேறு மருத்து வர்களைக் கொண்டு சொல்லப்படுகின்றவைகள் எந்த அளவுக்குப் பலன் தரும் என்பதைக் கண்டறிய ஆராய்ச்சிக் கழகம் இருக் கிறது. இந்த ஆராய்ச்சி இப்பொழுது எங்கு பார்த்தாலும் நடந்து வருகிறது. தமிழகத்திலும் நடத்த வேண்டுமென்று, இது தொடர்பான செயற்குறிப்புகள் வரப்பெற்று ஆய்விலுள்ளன. நல்ல பலன்களைத்தந்தால் அதன்மூலம் தயாரிக்கப்படும் மருந்துகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்ற அளவில் இப்பொழுது சில பல மருந்துகள், மூலிகைகள், மூலிகைப் பொருள்கள் ஏற்றுமதி செய்யும் அளவுக்கு இந்தக் கழகம் இருக்கிறது.

Connemara Public Library

* 533 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether any complaints have been received from the public by the Chief Secretary or the Secretariat Complaints-Cell or the Chief Minister against the Librarian with regard to the working of the Connemara Public Library ; and

(b) if so, the nature of the complaints and the action taken thereon ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) இது பரிசீலனையில் உள்ளது.

* 534 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether any prescribed norms are being observed in the matter of selection of books in the Connemra Public Library ;